LIBRARY
02 JUN 2003
Eastern University, Sri Lanka

# EASTERN UNIVERSITY, SRI LANKA
## Faculty of Commerce and Management
## Part III Examination in Bachelor of Business Administration
## External degree 2001/2002 (Repeat)
## BBA 404: Operational Management

Answer all questions Time: 03 hour

**Q1**

a) செயற்பாட்டு முகாமைத்துவம் என்ற பதத்தினை விளக்கி அதனுள் உள்ளடங்கும் முக்கிய முகாமைத்துவ செயற்பாடுகளை குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

b) திறமையான பராமரிப்பு கொள்கையினை அமுல்படுத்துவதனால் ஓர் நிறுவனத்திற்கு கிடைக்கக் கூடிய நன்மைகள் யாவை?

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**Q2**

a) ஒரு உற்பத்தி நிறுவனத்தின் அமைவிடத்தினை தெரிவு செய்யும் போது கருத்தில் எடுக்கப்படவேண்டிய "காரணிகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

b) தரக்கட்டுப்பாடு என்ற பதத்தினை சுருக்கமாக விளக்கி, உற்பத்தி நிறுவனங்களுக்கு அதன் முக்கியத்துவத்தினை ஆராய்க.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**Q3** பின்வரும் அட்டவணையானது குறிப்பிட்ட ஒரு திட்டத்துடன் தொடர்புடைய தரவுகளைக் காட்டுகின்றது.

| தொழிற்பாடு | முன்தொழிற்பாடு | சுதாரணம் | | இறுக்க | |
|---|---|---|---|---|---|
| | | காலம் (நாட்களில்) | செலவு (ரூபா) | காலம் (நாட்களில்) | செலவு (ரூபா) |
| A | - | 14 | 1800 | 12 | 2250 |
| B | - | 16 | 2250 | 12 | 2700 |
| C | A | 18 | 2700 | 14 | 3300 |
| D | A | 22 | 3300 | 16 | 4200 |
| E | B | 16 | 2550 | 10 | 3600 |
| F | B | 20 | 3000 | 14 | 3900 |
| G | C | 24 | 3900 | 20 | 4500 |
| H | DE | 26 | 4200 | 22 | 4500 |
| I | F | 28 | 4500 | 20 | 6000 |

திட்டத்திற்கான நேரில் செலவு நாளொன்றிற்கு ரூபா 200 ஆகும்.

a) வலைப்பின்னல் வரைபடத்தினை வரைந்து சாதுரிய மார்க்கத்தினை குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

b) திட்டத்திற்கான சாதாரணகாலம் சாதாரண செலவு என்பவற்றை குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

c) இத்திட்டத்திற்கான குறைந்த செலவினையும் அதனோடு இணைந்த காலத்தினையும் கணிப்பிடுக.

(08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q4

ஒரு கம்பனியானது நான்கு தொழிற்சாலைகளையும் மற்றும் நான்கு விற்பனை முகவர்களையும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொண்டுள்ளது. உற்பத்திச் செலவு (ஒரு அலகுக்கான விலை) விற்பனை விலை ( ஒரு அலகுக்கான விலை) கொண்டு செல்லல் செலவு ( ஒரு அலகுக்கான விலை) மாதாந்த இயலளவு மற்றும் மாதாந்த தேவைப்பாடு என்பன கீழே தரப்பட்டுள்ளன.

விற்பனை முகவர்

| தொழிற்சாலை | 1 | 2 | 3 | 4 | மாதாந்த இயலளவு (அலகுகள்) | உற்பத்திச் செலவு |
|---|---|---|---|---|---|---|
| A | 7 | 5 | 6 | 4 | 10 | 10 |
| B | 3 | 5 | 4 | 2 | 15 | 15 |
| C | 4 | 6 | 4 | 5 | 20 | 16 |
| D | 8 | 7 | 6 | 5 | 15 | 15 |
| மாதாந்த தேவைப்பாடு (அலகுகள்) | 8 | 12 | 18 | 22 | | |
| விற்பனை விலை | 20 | 22 | 25 | 18 | | |

இலாபத்தினை உச்சப்படுத்துவதற்கான மாதாந்த உற்பத்தி மற்றும் விநியோகத் தொகுதியினை கணிக்குக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

Q5 பின்வருவனவற்றிற்கு சிறு குறிப்பு எழுதுக.

1. இயந்திர பராமரிப்பு
2. முறைமை கற்கை ( Work Study)
3. Just-in-time.
4. மூலப்பொருள் தேவைப்பாட்டுத்திட்டம்( MRP)
5. 5 S எண்ணக்கரு

(5*4; = 20 புள்ளிகள்)